**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 89 /2019 PW1**

10.09.2024 **வா.சா.1 திரு. சென்னம்மாள் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

1ம் பிரதிவாதியின் கல்வி அறக்கட்டளையின் அலுவலகத்திற்கு கூட நான் சென்றதில்லை என்றால் சரியல்ல. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த அறக்கட்டளை ஏழை எளியோருக்கு உதவி செய்யும் தர்ம அறக்கட்டளை ஆகும். அறக்கட்டளையில் எத்தனை உறுப்பினர்கள் என்று கேட்டால் நியாபகம் இல்லை. 27.08.2008 ல் அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது. அறக்கட்டளை ஆவணத்தில் நான் சொல்வது போல் ஏழை எளியோருக்கு உதவி செய்யும் தர்ம அறக்கட்டளை என்ற வாசகம் இல்லை என்றால் சரியல்ல. அறக்கட்டளை துவங்க மூலப்பணம் எவ்வளவு என்று கேட்டால் எனது பங்கு மட்டும் ரூ. 20 லட்சம், மற்றவர்கள் எவ்வளவு கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எத்தனை பேர் எவ்வளவு பங்கு கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஒரு ஷேருக்கு ரூ. 2 லட்சம் மதிப்பு ஆகும், சிலர் 2 ஷேர், சிலர் 3 ஷேர் என போட்டுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ல் உள்ள புகைப்படத்தில் உள்ளவர் 2ம் பிரதிவாதியின் மனைவி புவனேஸ்வரி என்றால் சரிதான். புவனேஸ்வரி பொதுவான விவரங்கள் நன்கு தெரிந்தவர் என்பதால் அவரை அறக்கட்டளையின் தோற்றுனர் என நாங்கள் தேர்வு செய்து நியமித்தோம். பெருமாள் கோயில் தெரு, கதவு எண் 49, செங்கம் என்பது புவனேஸ்வரியின் முகவரி என வா.சா.ஆ.2ல் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் புவனேஸ்வரி தோற்றுனர் என்றும், ராமஜெயம், கே. கார்த்திகேயன் ஆகியோர் புவனேஸ்வரியால் நியமணம் செய்யப்பட்ட அறக்கட்டளைதாரர்கள் என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் எனது பெயர் அறக்கட்டளைதாரர் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஏதும் அறக்கட்டளைக்கு இல்லை என வா.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் மூலத்தொகை எவ்வளவு என குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அறக்கட்டளைதாரர்கள் ராமஜெயம், கார்த்திகேயன் மற்றும் தோற்றுனர் புவனேஸ்வரி உட்பட அனைவரும் இன்று வரையிலும் உயிருடன் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆனால் அவர்கள் யாரும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் எனக்கு

அது குறித்து நியாபகம் இல்லை. வா.சா.ஆ.2ல் இந்த அறக்கட்டளை பொது அறக்கட்டளை என கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் கேட்டுள்ள நிவாரணத்திற்காக ஏற்கனவே ஒரு வழக்கை திருவண்ணாமலை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் டிரஸ்ட் ஓ.பி. 110/2011 என நாங்கள் தாக்கல் செய்தோம் என்றும், அந்த வழக்கானது 19.10.2016ல் உரிய விசாரணைக்கு பிறகு தள்ளுபடியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் அழகர் சாமி எப்படி இறந்தார் என்று கேட்டால் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார். எனக்கு 1 மகன், 1 மகள். 2ம் வாதி தான் எனது மகன். எனது மகள் பெயர் மீனாட்சி. அழகர்சாமியின் வாரிசு என்ற முறையில் தான் இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு எனது மகளும் வாரிசு தான் ஆனால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த அறக்கட்டளையின் அறக்கட்டளைதாரர் என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் செங்கம் புதிய குயிலம் என்ற கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார் என்றால் சரிதான். ஒரு அரசு ஊழியர் அறக்கட்டளையின் அறக்கட்டளைதாரராக இருக்க முடியாது என்றால் சரிதான். அதனால் தான் எனது கணவர் என்னை அறக்கட்டளைதாரராக ஆக்கினார். **(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.